1995 ஏப்ரல் 3]

ரூபாய் 3 கோடியே 80 லட்சம் என்று சொல்கின்ற அளவுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் உடனடியாக அரசு நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஆகவே ஏற்கனவே ஒரு தரைப் பாலம் இருக்கிறது. 29 கண்கள் கொண்டதாக அந்தப் பாலம் இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்திலே போக்குவரத்திற்கு தற்போது எந்தவிதமான இடையூறும் இல்லை. மழைக்காலங்களிலே அந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. எதிர்காலத்திலே நிதி ஆதாரங்களைப் பொறுத்து இதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 188, திருமதி. வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

188—

திருச்சுழி வட்டத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

*** 35689**—*திருமதி வி.ஜி. மணிமேகலை:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதியில் பின்தங்கிய வட்டமான திருச்சுழி வட்டத்தில் அரசு தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்”

என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றையதினம் தொலை நோக்குப் பார்வையோடு ‘உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்’ என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே வந்த நம்முடைய இன்றைய சந்ததியினர், இளைய தலைமுறையினர், சமுதாய நலனுக்காக, கருமமே கண்ணாக, மதமாச்சரியமற்ற செக்யுலர் கவர்ன்மெண்ட்டை பொற்கால ஆட்சியாக நடத்திவரும் நம்முடைய

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இன்றைக்கு "An Institution is the lengthened shadow of an individual" என்கிற லாங்மென் அவர்களின் கோட்பாட்டிற்கு இணங்க இன்றைக்குத் தமிழகத்திலே தொழில் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று கூறிவிட்டார்கள். வருத்தமாகத்தான் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் அங்கே பலபேர் இன்றைக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற காரணத்தினால், பஞ்சம் பிழைப்பதற்காக பலர் ஊரை விட்டே, கிராமங்களைக் காலி செய்துகொண்டு போய்க்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. தொழில் கூடங்களை அமைத்து அங்கு தொழில் முனைவோர்களுக்கு பல சலுகைகளை செய்து கொடுத்தால் அங்கு இருக்கக்கூடிய மக்கள் அதாவது தினக்கூலி வேலைக்கு அங்கு அதிகமாக லேபர்ஸ் கிடைப்பார்கள் என்ற தன்மையினால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருச்சுழியில் 5 ஷெட்டுகளும், காரியாபட்டியில் 30 ஷெட்டுகளும், வத்திராயிருப்பு என்கிற ஊரில் 5 ஷெட்டுகளும் கட்டப்பட்டு அவைகளிலே இன்னும் 5 ஒதுக்கீடு [illegible]படாமல் காலியாகவே உள்ளன. ஆகவே, அந்தப் பகுதியிலே தொழில் முனைவோர் ஆர்வமாக முன்வருவதில்லை. அப்படி யாராவது முன்வருவார்கள்ளானால் அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவது என்பது இழுக்கு என்ற வள்ளுவரின் கோட்பாட்டுக்கு இணங்க இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், அங்கு தொழில் முனைவோர் முன்வரவில்லை என்று. குறிப்பாக, காமராஜர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய, அருப்புக்கோட்டை தொகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். வறுமைக்கோட்டுக்கும் கீழ் இருக்கக்கூடியவர்கள்தான். விவசாயம் வானம்பார்த்த பூமியாக இருக்கிறது. அங்கு தொழில் முனைவோர்களே இல்லை என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அதனால்தான் அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு தினக்கூலியாவது கிடைப்பதற்கு, குறிப்பாக

காமராஜர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய சிவகாசி போன்ற தொழில் நகரங்களில், தொழில் கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள் ஏதாவது தொழில் கூடங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டு அமைச்சர் அவர்களை அணுகினால்—அவர்கள் அருப்புக்கோட்டை தொகுதியில் இருக்கக்கூடிய திருச்சுழியில் ஏற்கெனவே 5 தொழில் கூடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன, அதற்கு தொழில் முனைவோர்கள் யாரும் வரவில்லை என்று கூறியிருக்கின்றார்கள்—அவர்களை என்னுடைய தொகுதியிலே வந்து தொழில் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலும் மற்றும் பக்கத்திலும் உள்ள தொழில் முனைவோர்களை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அணுகி, அவர்களை எல்லாம் இவர்களுடைய தொகுதிக்கு அழைத்து வருவார்களானால் அத்தனைபேர்களுக்கும் அரசு உதவி செய்ய கனிவோடு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 189, திரு. என். ஆர். ராஜேந்திரன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

189—

கூலி விவசாயிகளுக்கான நலத்திட்டம்

***23398—**திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலமற்ற கூலி விவசாயிகளுக்கான நலத்திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எனவே அடுத்த கேள்வி எழாது.